# நான் உங்களுக்கு கூறும் ஆலோசனை என்னவெனில், தேவன் உங்கள் இருதயத்தில் பேசும்போது உடனே செயல்படுங்கள்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

Los Angeles, California USA
65-04-29E

**16.** உங்களுக்கும் தெரிந்து கொள்ளுதல் உள்ளது. ஒரு சபையை நீங்கள் தெரிந்து கொள்ளும் போது, நீங்கள் அந்த சபையில்... **நீங்கள் சபையைத் தேர்ந்தெடுக்கும் போது, அது உங்களை நித்தியத்துக்கு வழி நடத்துமா என்பதைக் குறித்து**

## நீங்கள் உறுதியாய் அறிந்திருக்க வேண்டும்.

ஸ்தாபனக் கோட்பாடுகளைக் கொண்ட சபையை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். உங்களுக்கு கோட்பாடுகள் மாத்திரமே அவசியமென்று நீங்கள் நினைக்கலாம். அல்லது மற்றொரு சபை சிறந்த கோட்பாடுகளைக் கொண்டுள்ளது என்று நீங்கள் எண்ணலாம். ஆனால் நீங்கள் தெரிந்து கொள்வதற்கு தேவனுடைய வார்த்தையும் உள்ளது. ஆகவே, இவைகளில் நீங்கள் எதை தெரிந்து

கொள்ளுவீர்கள் என்பதை தீர்மானம் செய்ய வேண்டும். தெரிந்து கொள்ளதலின் விஷயத்தில் நம்மிடையே எழுதப்படாத ஒரு பிரமாணம் உள்ளது.

ஒரு சமயம் எலியாவுக்கு கர்மேல் பர்வதத்தின் மேல் ஒரு பிரச்சனையான நேரம் வந்தபோது, அங்கு பலப்பரீட்சை உண்டானது. அத்தகைய நேரத்தை இப்பொழுது நாம் அணுகிக் கொண்டிருக்கிறோம். நீங்களும் நானும் கர்மேல் பர்வத அனுபவத்தைப் போன்ற ஒன்றைக்

குறித்து இன்றிரவு தீர்மானம் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். வெளிப்படையாகக் கூறினால், அத்தகைய அனுபவம் உலகம் முழுவதும் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.

**ஆனால் வெகு விரைவில், இவ்விரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டிய நேரம் ஒன்று வரப்போகிறது.**

**17. ஸ்தாபன சபைகளைச் சேர்ந்தவர்களே, இதை நம்புங்கள். நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நேரம் உங்கள் மேல் இப்பொழுது**

வந்துள்ளது நீங்கள் உலக சபைகளின் ஆலோசனை சங்கத்திற்குள் செல்ல வேண்டும். இல்லையேல் நீங்கள் ஒருக்காலும் ஸ்தாபனமாக இருக்க முடியாது. நீங்கள் அதை செய்ய வேண்டும். இவ்விரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ளுதல் என்பது விரைவில் வந்து கொண்டிருக்கிறது.

ஆனால் கடைசி மணி நேரம் வரை காத்திருத்தல் ஆபத்தானது. ஏனெனில் அதை உதறித் தள்ளிவிட முடியாத அளவுக்கு உங்கள் நிலைமை வந்துவிடும்.

**உங்களை எச்சரிக்கும் நேரம் ஒன்றுள்ளது. ஆனால் எச்சரிப்பின் கோட்டை நீங்கள் கடந்துவிட்டால் மற்ற பக்கத்துக்காக நீங்கள் குறியிடப்படுகிறீர்கள் - சூடு போடப்படுகிறீர்கள்.**

18. யூபிலி ஆண்டின் போது ஆசாரியன் எக்காளம் ஊதிக் சென்று, அடிமைகள் அனைவரும் விடுதலையாகிச் செல்லலாம் என்று அறிவிக்கிறான்.

ஆனால் அவர்கள் விடுதலையை ஏற்க மறுத்துவிட்டால். அவன் ஆலயத்தின் நிலைக்காலுக்குக்

கொண்டு செல்லப்பட்டு, ஒரு கம்பியினால் அவன் காது குத்தப்படுகின்றது. அதன் பின்பு அவன் தன் எஜமானை வாழ்நாள் பூராவும் சேவிக்க வேண்டும்.

அவன் செவிகள் கேட்டன என்பதன் அடையாளமாக அது குத்தப்படுகின்றது.

ஏனெனில் விசுவாசம் கேள்வியினால் (ஆங்கிலத்தில் by Hearing) கேட்பதனால், தமிழாக்கியோன்) வருகின்றது.

**அவன் எக்காள சத்தத்தைக் கேட்ட பின்பும் அதற்கு செவி கொடுக்க மறுத்துவிட்டான்.**

அவ்வாறே அநேக சமயங்களில் ஆண்களும், பெண்களும் தேவனுடைய சத்தியத்தைக் கேட்டு அது உறுதிப்படுத்தப்பட்டு நிரூபிக்கப்பட்ட சத்தியமாக உள்ளதைக் காண்கின்றனர். ஆயினும், அவர்கள் அதற்கு செவிகொடுக்க விரும்புவதில்லை. அதற்கு வேறெதோ காரணம் உண்டு.

அவர்கள் சத்தியத்தையும் உண்மைகளையும் சந்திப்பதற்கு பதிலாக, வேறு ஏதோ ஒன்றைத் தெரிந்து கொள்கின்றனர். எனவே அவர்களுடைய செவிகள்

சவிசேஷத்திற்கு அடைக்கப்படுகின்றன. அவர்கள் அதை மறுபடியும் கேட்பதற்கு முடிவதில்லை.

நான் உங்களுக்கு கூறும் ஆலோசனை என்னவெனில், தேவன் உங்கள் இருதயத்தில் பேசும்போது உடனே செயல்படுங்கள்.

எலியா அவர்களிடம் இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ளக் கூறினான். அவர்கள் அதை செய்ய வேண்டும். "இன்று யாரைச் சேவிக்கப் போகின்றீர்கள் என்று தீர்மானம் செய்யுங்கள்.

கர்த்தர் தெய்வமானால், அவரைப் பின்பற்றுங்கள், பாகால் தெய்வமாயிருந்தால், அவனைப் பின்பற்றுங்கள்" (1 இராஜா 18:21).

